SRI N. K. PALANISAMI : நமது சென்னை ராஜ்யம் ஜோனலிலிருந்து பிரிந்த பிறகு லெவி முறை கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது உண்மையா ? அப்படியானால் ஜோனலிலிருந்து பிரிந்தால் மட்டும்தான் லெவி போடுவோம் என்று சொல்லக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது உண்மை அல்ல.

Madras Penitentiary

* 228 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to shift the Penitentiary located in Madras to a place outside the City of Madras; and

(*b*) if so, the reason therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The important reasons are—

(i) that there is not enough land for cultivation;

(ii) that there is not enough accommodation for the Jail staff;

(iii) that the Jail is cramped and there is no space for the recreation of the prisoners;

(iv) that there are no facilities for drilling the warder staff and for conducting musketry exercises; and

(v) that the Jail has also no burial grounds.

SRI N. K. PALANISAMI : இதை வேறிடத்திற்கு மாற்றவேண்டுமானால் சர்க்காருக்கு எவ்வளவு செலவாகும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ஜெயிலிலேயே சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அவசியம், அதற்கு ஒரு லட்சத்து ஐம்பத்தாயிர ரூபாய் தேவை என்று கோரப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலே பணம் செலவு செய்வதை விட இதையே வண்டலூர் பக்கத்தில் கட்டுவதாக உத்தேசம். அப்படி மாற்றுவதனால் இந்தக் கட்டிடத்திற்கும் உபயோகம் இருக்கிறது. அதாவது ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்கு வசதி ஏற்படுகிறது.

Palm jaggery

* 229 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) பனை வெல்லம் பற்றாக்குறையை நிவர்த்திக்க இங்கேயே உற்பத்தி செய்ய ஏதேனும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. Steps have been taken to increase the production of Palm Jaggery by the Jaggery Manufacturing Co-operative Societies by 25,000 maunds every year over the production of the previous year and this target is achieved by the close supervision of the departmental staff.

(*b*) A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on page 218 infra.

9th September 1959]

Sri A. VEDARATHNAM : இந்த மாகாணத்தில் பனை வெல்லத்தினுடைய தேவை எவ்வளவு ? அந்தத் தேவையில் எந்த அளவுக்கு இங்கேயே உற்பத்தி செய்வதன் மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது ? இந்தப் பற்றுக்குறையை எத்தனை ஆண்டுகளில் சமாளிக்கலாம் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் ஏற்கனவே குறிப்பிட்டேன், வருஷா வருஷம் 26 ஆயிரம் மணங்கு உற்பத்தி அதிகப்பட்டு வருகிறது என்று இந்த மாகாணத்தின் தேவைக்கு இப்போது செய்யப்படுகிற உற்பத்தி போதியதாக இல்லை. முக்கியமாக தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில்தான் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களில் கஷ்டமாக இருக்கிறது. பாலக்காட்டிலிருந்தும், கோதாவரி மாவட்டங்களிலிருந்தும் இறக்குமதியாகிறது.

Sri K. ANBAZHAGAN : பனையிலிருந்து இறக்கப்படுகிற பதனீர் விற்பனை செய்யப்படலாம் என்றாலும்கூட அது கொஞ்சம் புளித்துப் போகிற காரணத்தினால் அவர்கள் மீது வழக்குப் போட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்கிற காரணத்தினால் அத்தொழிலில் பலர் ஈடுபடுவதற்கு முன் வருவது இல்லையென்பது தெரியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பதனீர் மதுவாகப்போனால் குற்றம்தான். அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்காகத் தான் இப்போது கூட்டுறவு சங்கம் அமைக்கப்படுகிறது. அந்த கூட்டுறவு சங்கத்தின் மூலமாக ரெப்ரிஜிரேடர் அமைத்து பதனீர் புளித்துப் போகாமல் அதில் வைத்து விற்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சென்னையிலேகூட அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டு இனிய உணவு ஆகாரமாக வழங்கப்படுகிறது.

Sri K. B. S. MANI : பனை வெல்ல வருடாவருட உற்பத்தி 25 சதம் அதிகப்படுவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த அளவில் பனை வெல்லம் உற்பத்தி கிடையாது. ஆனால் கூட்டுறவு சொஸைட்டி மூலமாக இவ்வளவு உற்பத்தி செய்யப்படுவதாக மட்டும் கணக்கு அனுப்பப்படுகிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ப்ளாக் மீட்டிங்கிலேகூட இது விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : தஞ்சை ஜில்லாவிலே உற்பத்தி இல்லை. பெரும்பாலும் திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களில்தான் அதிக உற்பத்தி செய்யப்படுகிறது.

Sri K. ANBAZHAGAN : திருநெல்வேலியில் உள்ள பதனீர் இறக்கும் தொழிலாளர்கள் வைத்திருக்கும் பதனீர் புளித்துப்போனால் அதை வழங்காமல் கீழே ஊற்றிவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் உறுதி ஒன்றும் கூறமுடியாது. இதைப்பற்றி பரிசீலனை செய்து எவ்வாறு இப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதன்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

Sri G. G. GURUMURTHI : பதனீர் இறக்குபவர்கள் அதை வேண்டுமென்றே புளிக்கவைத்து அதிக விலையில் விற்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

Sri P. G. MANICKAM : சர்க்கார் கொடுத்த அறிக்கையிலிருந்து ஏராளமான பனைமரங்கள் கோயம்புத்தூர் ஜில்லாவில் இருப்பதாக தெரிவதால் அங்கே பனைவெல்லம் உற்பத்தி செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்திற்கு உத்திரவு பிறப்பிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கவனிக்கப்பட்டுவருகிறதென்று முன்பே சொன்னேன்.

[9th September 1959

SRI S. M. ANNAMALAI : மானிலத்தில் பனைவெல்ல பற்றுக்குறையிருக்கும்போது பதனீர் இறக்குவதில், லைசென்ஸ் கொடுப்பதை நாளுக்கு நாள் குறைத்துக்கொண்டு வருவதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்குக் காரணம் முன்பு ஒரு உபகேள்வி கேட்ட அங்கத்தினருக்கு பதில் சொல்லியிருக்கிறேன். இது துஷ்பிரயோகப்படுத்தப்படுவதனால் ஒரு சில இடங்களில் லைசென்ஸ்களைக் குறைக்கவேண்டியிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : இப்போது பதனீரிலிருந்து நவீன முறையிலே சாக்லெட், வெள்ளை சர்க்கரை போன்ற சில வஸ்துக்கள் தயாரிக்கின்றார்களே, அம்மாதிரி மாநிலத்தில் எத்தனை இடங்களில் இந்தப் பதார்த்தங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதை இன்னும் அதிகரித்து இதன் மூலம் சர்க்கரைத் தேவையை ஓரளவு குறைக்க சர்க்கார் முனைவருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விஸ்தரிக்கும் யோசனை அரசாங்கத்திற்கு உண்டு, மற்ற தகவல் இப்போது இங்கு இல்லை.

Fire accident

* 230 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that fifty-five huts were destroyed by fire in Alwarpet, Madras, on 11th June 1959;

(*b*) if so, the amount of total loss; and

(*c*) whether compensation has been paid to the affected families?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Sixty-two huts were destroyed in the fire accident referred to.

(*b*) About Rs. 20,000.

(*c*) No compensation is paid by the Government in such cases. Only cash grants are given and clothes are distributed to the affected families as a measure of relief. Cash grants to the extent of Rs. 1,830 and clothes to the value of Rs. 588-74 nP. were distributed on 16th June 1959 to the affected families.

SRI A. A. RASHEED : Sir, in view of the fact that the hut-dwellers lost their entire possessions, will the Government increase the cash grants to the affected families?

THE HON. SRI M. A. MANICKAVELU : No. Sir, it is not possible. It is only by way of a temporary relief this is being given. Originally only cash grants were given. Now we give clothes. Only to some extent we can help them.

SRI K. VINAYAKAM : Sir, the presence of these thatched huts is an invitation to fire. What steps have the Government taken to remove the huts from conjested localities and locate them in a more spacious place? Apart from giving cash grants, what steps have the Government taken to punish such of those miscreants who are responsible for the fire?

MR. SPEAKER : I was about to rule the first part of the question out of order as it involves general policy. The Hon. Minister may answer the second part of the question. I have no objection to that.